DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.

**OS.NO. 133/2025**

Deposition of Witness : Dw3

| | |
|---|---|
| Name - **திரு.குணசேகரன்** | Father's Name – |
| Village - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of **30.07.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் பிரதிவாதி தரப்பு 3வது சாட்சி. எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்து பார்த்தேன். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னவை, அதனை சரி என ஒப்புக்கொண்டு எனது கையொப்பத்தினை செய்துள்ளேன்.

**சான்றாவணங்கள் – இல்லை**

**குறுக்கு விசாரணை**

1. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியும். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள வாக்குமூலம் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டதென்றால் கடமலைக்குண்டு–ல் வைத்து தயாரிக்கப்பட்டது. அந்த வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை சிலம்பரசன் தான் சொன்னார். நான் எதற்காக சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால், பத்திர பதிவு அலுவலத்தில் ரூ.30 லட்சத்திற்கு ஒத்தி ஆவணம்

தயாரிக்கப்பட்டது, அதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். ரூ.30லட்சத்திற்கு ஒத்திக்கு பதிலாக ஈடுகடனாக எழுதப்பட்டது, அதில் வட்டிக்கு பதிலாக தென்னந்தோப்பில் தேங்காய் வெட்டிக் கொள்ள ஒப்பந்தம் போடப்பட்டது.

2. நான் கூறியுள்ள மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில் தான் ஈடுகடன் பத்திரம் தயார் செய்யப்பட்டதென்றால் சரிதான். ஈடுகடன் பத்திரம் தயார் செய்தபோது யார், யார் உடன் இருந்தார்கள் என்றால் சிலம்பரசன் மற்றும் செல்வராஜ் ஆகியோர் இருந்தனர். அந்த ஈடுகடன் பத்திரமானது கடமலைக்குண்டு பத்திர அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் ஈடுகடன் பத்திரத்தில் வட்டிக்கு பதிலாக உழவினை செய்து கொள்ளலாம் என்ற வாசகம் இல்லை என்று சொன்னால் சரிதான். இந்த ஈடுகடன் பத்திரத்தை தவிர்த்து வேறு எந்த ஆவணமும் எழுதிக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தவறான விபரங்கள் அடங்கிய முதல் விசாரணை வாக்குமூலத்தை தயார் செய்து நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.